RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt1944

# அகத்தில் மார்க்ஸியம்

**இரா .மணிக்கண்ணன்** [அ,*]

[அ] தமிழ்த்துறை, தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி, தமிழ்நாடு 605602, இந்தியா.

# Marxism on the inside

**R. Manikannan** [a,*]

[a] Department of Tamil, Theivanaiammal College for Women, Tamil Nadu 605602, India

Received : 11-08-2019
Accepted : 08-10-2019

**ABSTRACT**

We could understand that the research works on Tamil stories, in a way bring out a fine cross section of the Tamil society's functioning spaces. The short stories of Rajendra Cholan, a person who travelled in a unique path and whom you cannot void in the history of Tamil short stories soaked in the philosophy of Marx and Ambedkar created his short stories in his own style. This paper studies the nature and the style the stories are depicted to suit the Tamil tradition and also how the ideology of Marxism plays the undercurrent of these stories.

**Keywords:** Marxism, Rajendra Cholan, Tamil stories

## முன்னுரை

தமிழ்ச் சிறுகதைகளைப் பற்றிய ஆய்வுகள் ஒரு வகையில் தமிழ்ச் சமூகத்தின் இயங்குவெளிகள் பற்றிய நுண்மையான குறுக்குவெட்டுத்தோற்றத்தை வெளிக்கொணர்வன என்று புரிந்து கொள்ளலாம் தமிழ்ச்சிறுகதை வரலாற்றில் தவிர்க்க முடியாத .ஆளுமையாய் தனிப்பாதையில் பயணித்த, மார்க்ஸிய அம்பேத்கரிய சிந்தனைப்புலத்தில் தோய்ந்து, படைப்புகளை உருவாக்கிய இராசேந்திரசோழனின் சிறுகதைகள் எத்தன்மையன என்பதையும் அக்கதைகள் தமிழ் மரபிற்கு ஏற்ற வகையில் உருவாக்கப்பட்டுள்ள முறைமையையும் மற்றும் இக்கதைகளின் அடிநாதமாக மார்க்ஸிய கருத்தியல் அமைந்துள்ள தன்மையையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

மனித குணாதிசியம் வரையறைக்கு அப்பாற்பட்டது, தர்க்கத்திற்குள் அடங்காதது. மனிதனின் விருப்பு வெறுப்புகள் புரிந்து கொள்ள முடியாதவை மட்டுமல்ல புதிரானவையும்

கூட, ஆதலால் தான் அனைத்தையும் அவதானித்து துல்லியமாகக் கணிக்கும் கணிப்பொறிகள் கூட மனிதனின் தர்க்கத்திற்கடங்கா சிந்தனைப்போக்கின் முன் தோல்வியைத் தழுவி நிற்கின்றன. மனத மனத்தின் இந்தப் புதிரான தன்மை தான் இலக்கிய ஆக்க செயல்பாடுகளிலும் பிரதிபலிக்கிறது என்பதின் வழி இலக்கியச் செயல்பாட்டின் சிக்கல் நிறைந்த பண்பை உணர்ந்து கொள்ள முடியும். இலக்கியம் பற்றிய உரையாடல்களில் இத்தகைய சிக்கலை மையமிட்ட விவாதங்கள் உண்டாகும் போது படைப்பின் சாரம்சத்தையும், படைப்பாளரின் கருத்தியலையும் கண்டு கொள்ள முடியும்.

தமிழ் இலக்கியம் என்கிற பெருவெளியில் எண்ணிக்கை அற்று காணப்படுகிற படைப்புகளுள் ஒவ்வொரு படைப்பும் சொல்லும் பொருளிலும், சொல்லுகின்ற முறையிலும் தனித்துவமானவை. தனித்துவம் கொண்ட இந்தப் படைப்பு வெளியில் தனக்கானதொரு இடத்தை அடைந்திருக்கிற இராசேந்திர சோழனின் கதைகள் எத்தன்மை கொண்டவை, இந்தக் கதைகளின் ஆதார மையம் என்ன, படைப்பாளரின் கருத்தியல் அவரின் இலக்கிய ஆக்க முயற்சியில் எப்படி ஆளுமை செலுத்தியிருக்கிறது என்பவற்றை இந்தக் கட்டுரை ஆராய்கிறது.

## தமிழ் இலக்கியப் பெருவெளியில் இராசேந்திர சோழனின் கதைகள்

தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறுகதைகளின் வரவு கடந்த நூற்றாண்டில் தான் ஏற்பட்டது என்றாலும், எண்ணிக்கை அடிப்படையிலும் பாடுபொருள் அடிப்படையிலும், சிறுகதைகள் மற்ற இலக்கிய வகைமைகளைக் காட்டிலும் மேம்பட்டத் தன்மை கொண்டதாகவே இருக்கின்றன. சிறுகதைகளின் பலவிதமான போக்குகளைப் புரிந்து கொள்ளும் வகையிலும் அடையாளப்படுத்தும் வகையிலும் பல்வேறு முயற்சிகள் தமிழ் திறனாய்வுப்புலத்தில் நடந்துள்ளன. திறனாய்வுப்புலத்தில் இராசேந்திர சோழனின் கதைகள் எத்தகைய நிலையில் நோக்கப்படுகிறது என்பதை அறிந்து கொள்வது அவசியமானதாகும். தமிழ் சிறுகதைகளின் தன்மையை எழுத்தாளர்களின் காலப்பிண்ணனியோடு தொடர்புபடுத்திக் கூறும் வீ. அரசு, 1965 - 1980 வரை இயங்கிய சிறுகதை எழுத்தாளர்களின் வரிசையில் இராசேந்திர சோழனினை நிறுத்தி, இக்காலக் கட்டத்தின் இயல்புகளாக பின் வருவனவற்றைக் கூறிகிறார்.

- அரசியல் கருத்துநிலைகள் சார்ந்த இளைஞர்கள் தமிழகக் கிராமப்புறங்களில் உருவானார்கள்.
- இக்காலச்சூழலில், ஆங்கில வாசிப்பு மரபு உடையவர்கள் மிகக்குறைவு. இதனால், தமிழ்மண்ணின் வீரியம் ஆக்கங்களாக வடிவம் பெற முடிந்தது.
- இடதுசாரி கருத்துநிலை; அதன் எதிர்க் கருத்துநிலை எனும் படைப்பாளிகள் இக்காலத்தில் தமிழ்ப் புனைவுலகில் உருவாகினர். (2012: 14 - 15)

இக்காலக் கட்டத்திற்குரிய சிறுகதைப்பண்புகளைக் கொண்டதாகவும் இதிலிருந்து மாறுபட்டப் பண்புகள் கொண்டதாகவும் இராசேந்திர சோழனின் கதைகள் அமைந்திருக்கின்றன என்பதை அவரின் கதைகள் கட்டியங்கூறுகின்றன.

## இராசேந்திர சோழன் கதைகளின் குவிமையம்

நவீன தமிழ் இலக்கிய வரலாற்றில் படைப்பாளர்களையும் படைப்புகளையும் பிரித்துப்பார்க்க முடியாத வகையில் படைப்புகள் படைப்பாளிகளின் அடையாளமாக மாறியிருக்கின்றன. படைப்புகள் பன்முகத்தன்மையுடன் இருந்தாலும் அதன் இயங்குதளம், அதன் மையம் ஆகியவற்றின் மூலம் ஒரு படைப்பாளரின் படைப்புகள் இத்தகைய குவி மையம் கொண்டவை என்று திறனாய்வாளர்களால் அடையாளப்படுத்தப்படுகின்றன. இராசேந்திர சோழனும் இதற்கு விதி விலக்கல்ல. இவருடைய பல தரப்பட்ட கதைகளின் குவிமையம் பற்றி குறிப்பிடும் சு. தமிழ்ச்செல்வன், "மூன்று தளங்களில் அவரது கதைகள் இயங்கின. ஒன்று ஆண் பெண் உறவு சார்ந்தது. இரண்டாவது சமூக யதார்த்தங்கள் சார்ந்தது. மூன்றாவதாக அவருடைய மனதை ஆக்கிரமித்தது அவரை அமுக்கிப்போட்டதாக நான் குறிப்பிட விரும்புவது கம்யூனிஸ்ட் கட்சி மீதான அவருடைய காட்டமான விமர்சனங்களும் குற்றச்சாட்டுகளும் கேலியும் நக்கலும் நிறைந்த கதைகள்.(2013: 56) என்று மதிப்பிடுகிறார். இந்த மதிப்பீட்டின் பின்புலத்திலும் இராசேந்திர சோழன் தமிழ் இலக்கிய மரபு சார்ந்து இயங்கிய படைப்பாளி என்பதாலும் இராசேந்திர சோழனின் சிறுகதைகளுடைய குவி மையம் அகம் (ஆண் பெண் உறவு சார்ந்தது) புறம் ( சமூகத்தின் புற உலகு சார்ந்தது) என்று தமிழ் மரபினுடைய திணைக்கோட்பாட்டின் பின்புலத்தில் (இராசேந்திர சோழனே ‘ கைக்கிளை’ என்று ஒரு சிறுகதையை எழுதியிருக்கிறார்) இங்கு அடையாளப்படுத்தப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்படுகிறது.

## புறத்தில் மார்க்ஸியம்

சமூகத்தின் புற உலகு சார்ந்தது எழுதப்பட்டிருக்கிற கதைகளின் பாடுபொருள் பலநிலைப்பட்டதாய் இருக்கின்ற போதிலும் சில குறிப்பிட்ட கதைகள் தமிழ் இலக்கிய உலகிலும் மார்க்ஸிய சிந்தனையாளர்களாலும் பெரிதும் விமர்சனதிற்கு உள்ளாக்கப்பட்டன. "இயக்கங்களின் சந்தர்ப்பவாதப் போக்கை வெளிப்படுத்துபவை பக்தி மார்க்கம், மையம், நிலச்சரிவு" (2002: 547) என்று படைப்பாளரே குறிப்பிடும் இக்கதைகளின் வரிசையில் ‘வினை’ (இயக்கத் தலைவர்களுடைய மனைவிமார்களின் ஆடம்பர வாழ்க்கை) சிறுகதையையும் சேர்த்து இக்கதைகளின் தன்மையை அனுகும் போது மார்க்ஸிய தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட இடதுசாரி இயக்கங்களின் சந்தர்ப்பவாதத் தன்மையை விமர்சிக்கும் தன்மைக்கொண்டதாய் இக்கதைகளின் மையம் அமைந்திருக்கிறது என்பது புலனாகும். மார்க்ஸிய இயக்கங்களின் உள் முரண்பாடுகளை, ஏதேச்சதிகாரப் போக்கை விமர்சனப்பூர்வமாய் இக்கதைகள் அனுகிய போதும் மார்க்ஸியத் திறனாய்வாளர்களால் இக்கதைகள் தவறாகவே புரிந்துகொள்ளப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## அகத்தில் மார்க்ஸியம்

இராசேந்திர சோழனின் அகம் சார்ந்த கதைகள் தமிழ் சிறுகதை வரலாற்றில் தனித்தன்மையுடையன. தமிழ் பண்பாட்டில் பெரும் பாய்ச்சலை நிகழ்த்தியவைகளாகவும் பெரிதும் விமர்சனத்திற்குட்பட்டவையாகவும் இக்கதைகளைக் கருத முடியும். கோணல் வடிவங்கள், ஊனம், தற்செயல், அவரோட லோகம், கைக்கிளை, சில சந்தர்ப்பங்கள், வானம் வெளிவாங்கி மற்றும் சூழல் ஆகிய கதைகள் அக உலகை மாறுபட்ட விதத்தில் பதிவு செய்த கதைகளாகும். காமம் பற்றிய பதிவுகள் செவ்வியல் இலக்கியங்களிலும் நவீன இலக்கியங்களிலும் பேசப்பட்டிருந்தாலும் கூட இக்கதைகள் பாலியல் செய்திகளை வெளிப்படுத்திய முறையும் இதன் வீச்சும் சராசரி மத்திய தர வாசகனை அதிர்ச்சிக்குள்ளாக்கின. இக்கதைகளில் காமம் பற்றிய விவரிப்புகள் பாலியல் என்பதைத் தாண்டி, சமூகத்தை காமமும் அதன் விழைவுகளும் எப்படி தன் வசப்படுத்தி தவிர்க்க முடியாத ஒன்றாய் மாற்றி வைத்திருக்கிறது என்பதை சித்திருத்திக் காட்டுகின்றன. இக்கதைகளைப்பற்றியும் இதன் இயங்குதளத்தையும் அறிந்துகொள்வது அவசியமானதாகும்.

வானம் வெளிவாங்கி, சில சந்தர்ப்பங்கள் மற்றும் பாசிகள் ஆகிய கதைகள் பாலியல் தொழிலையும் அதில் ஈடுபடுகிற பெண்களையும் குவி மையப்படுத்தி எழுதப்பட்டக் கதைகளாகும். பரத்தையரைப் பற்றி தொல் இலக்கியங்கள் முதற்கொண்டு தமிழ்ப் பண்பாட்டின் பல்வேறு தளங்களிலும் பல வகைப்பட்ட பதிவுகள் இருந்தாலும் கூட, இக்கதைகள் காட்சிப்படுத்துகிற நிகழ்வுகள் பரத்தமை பற்றிய பார்வைகளில் வித்தியாசத்தைக் காட்டுகின்றன. பரத்தையரை நன்மை x தீமை என்ற சட்டகத்தில் வைத்து அணுகாமல் அவர்களின் மன உணர்வுகளை, நவீன நகர வாழ்வில் அவர்களுக்கு ஏற்படும் நெருக்கடிகளை சித்திரிப்பதாய் அமைந்திருக்கும் தன்மை இக்கதைகளின் குறிப்படித்தகுந்த பண்பாகும். வேசைகள், திருடர்கள், சூதாடுகள், குடிகாரர்கள், தரகு மாமாக்கள், விலக்கப்பட்ட மனிதர்கள், ஓரினப் புணர்ச்சியாளர்கள், பால் பிறழ்வுற்றவர்கள் போன்றவர்களின் சந்திப்பு வெளியாகக் கதை எழுத்து உருவானது. இதில் ஜி. நாகராஜன், ராஜேந்திர சோழன் இருவரையும்முக்கியக் கதையாளர்களாகக் குறிப்பாகச் சொல்லலாம்.(2007:173) என்று கூறுகிற எஸ். ராமகிருஸ்ணன், குடிகாரர்களின் மயக்கமூட்டும் உலகுமானதும் வேசைகளின் துயரமும் வசீகரமுமான அன்றாடக் காட்சிகளும் ஐரோப்பிய ருஷ்ய இலக்கியங்களில் தொடர்ந்து எழுதப்பட்டு வந்திருக்கின்றன. அவை புறக்கணிக்கப்பட்டவர்களின் ஆத்மாவை எழுதுவதாகவே அந்த நிலவியலில் அறியப்பட்டது (ப.177). என்றும் கூறுகிறார். இதன் மூலம் இராசேந்திர சோழன் கதைகளில் பரத்தமை பற்றிய பதிவுகள், ருஷ்ய இலக்கியங்களின் செல்வாக்கினாலும் விளிம்பு நிலை மக்கள் என்கிற கருத்தியல் பின்புலத்தோடும் அடித்தள மக்களின் வாழ்வை பதிவு செய்திருக்கின்றன என்பதை அவதானிக்க முடியும்.

கோணல் வடிவங்கள், ஊனம், தற்செயல், சூழல் மற்றும் கைக்கிளை ஆகிய கதைகள் திருமண உறவிற்கு அப்பாற்பட்ட பெண்களின் காமத்தை வெகு நுட்பமாக பதிவு செய்துள்ள கதைகளாகும். தமிழ் இலக்கியப்பரப்பு முழுவதிலும் ஆணின் காமம் குறிப்பாக திருமண

உறவிற்கு வெளியே நடைபெறுகிற காமம், பரவலாகவும் இயல்பானதாகவும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது ஆனால் பெண்ணைப் பற்றி இப்படியானதொரு சித்திரிப்பை உண்டாக்க சராசரி தமிழ் எழுத்தாளர்களின் பிரக்ஞை இடம் கொடுக்கவில்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும். சில சந்தர்ப்பங்களில் பெண்களின் காமம் பேசப்பட்டாலும் அதுவும் கூட குற்றமாகவும் தண்டனைக்குரியதாகவே பார்க்கப்பட்டது. திருமண உறவிற்கு அப்பாற்பட்ட பெண்களின் காமத்தை, எந்தவித பாசாங்கும் இல்லாமலும் அதன் இயல்பான குணத்தை வெளிப்படுத்தும் தன்மையிலும் உருவாக்கப்பட்டுள்ள இக்கதைகள் தன்மை அறிந்து கொள்ள வேண்டியதாகும்.

- கோணல் வடிவங்கள் - திருமணத்திற்கு வெளியே நடைபெறுகிற ஆண் பெண் உறவிலும் கூட ஆண் எவ்வாறு பெண்ணை தனது உடைமையாகக் கருதுகிறான் என்பதை குறிப்பிடும் கதை.
- ஊனம் - மனைவி பிற ஆடவர்களின் மீது கொண்டுள்ள பாலியல் விழைவை ஒரு கணவன் எப்படி எதிர் கொள்கிறான் என்பதையும் இறுதியில் அவனது மரணத்தையும் சித்திரிக்கும் கதை.
- தற்செயல் - திருமணத்திற்கு முன் வேறொரு இளைஞனுடன் பாலுறவு கொள்ளும் பெண், இந்த உறவை இயல்பானதாகக் கருதி வேறொரு ஆடவனை மகிழ்ச்சியானதாக நனைத்து திருமணம் செய்ய முனைவதையும் தற்செயலாக மணமகன் இறப்பதையும் குறிப்பிடும் கதை.
- சூழல் - திருமணமான பெண் தனது திருமண உறவிற்கு அப்பால் வேறொரு இளைஞனுடன் பாலியல் உறவில் ஈடுபட்டது குறித்து எவ்வித குற்றவுணர்வும் கொள்ளாது கணவனுடன் வாழுவது பற்றி குறிப்பிடும் கதை.
- கைக்கிளை - கணவன் மற்றும் குழந்தையுடன் வாழும் ஒரு பெண் புதிதாக ஊருக்கு வந்திருக்கும் இளைஞன் மீது காதல் கொள்வது பற்றியக் கதை.

பெண்களுக்கு இச்சமூகம் வலியுறுத்தியுள்ள அற மதிப்பீடுகளை மீறுவதாகவும் திருமண உறவிற்கு அப்பாற்பட்ட பெண்களின் காமத்தை வெளிப்படுத்திவதாகவும் இக்கதைகள் இயங்குகின்றன என்பதை புரிந்து கொள்ள முடியும். இக்கதைகளின் அடிநாதம் மரபு மீறல் மற்றும் பெண்களின் குரலைப் பேசுவது என்றாலும், இந்த எதிர் கலாச்சாரப் பண்பு படைப்பினுள் எவ்விதம் நுழைந்தது என்பதை அறிந்து கொள்வது இன்றியமையாததாகும். இக்கதைகளுடைய படைப்பாளரின் மார்க்ஸியச் சார்பு மற்றும் அவரின் மார்க்ஸிய பின்புலம் அனைவரும் நன்கு அறிந்ததாகும். மார்க்ஸியத்தை பொருளாதாதார வாதமாக மட்டும் அணுகாமல் அதன் மற்ற கூறுகளையும் அதன் வழி மார்க்ஸிய விமர்சனத்தையும் முன்னெடுக்கும் போது இலக்கியத்தின் பல் பரிமாணத்தன்மையை உணர்ந்து கொள்ள முடியும்.

திருமண உறவிற்கு அப்பாற்பட்ட பெண்களின் காமம் என்பதை புனிதக்காதல்( ஒருவனுக்கு ஒருத்தி) என்பதற்கு எதிரான ஒன்றாகக் கருதலாம். தனிமனிதக் காதல், புனிதக் காதல் என்று மார்க்ஸிய வயப்பட்ட முறையில் காதலை விளக்கும் அருணன், தனிமனிதக்

காதல் விவசாய சமூகத்தில் துவங்கியது ஆனாலும் அது தொடர்ந்து பயணிக்கும் என்ற ஏங்கெல்ஸின் கருத்தை, 'காதல் என்னும் தேர்வு இரு முனைகள் ஒரு மையத்தில் குவிவதால் ஏற்பட வேண்டும். அண், பெண் இருவரும் செய்யும் தேர்வு இணைய வேண்டும். இதில் எந்த தரப்பிலும் நிர்பந்தம் இருக்கக்கூடாது. அதுமட்டுமல்ல, இது ஒரு கட்டத்தில் இருவர் எடுத்த முடிவு. இன்னொரு கட்டத்தில் அது மறு பரிசீலனைக்கு ஆகக்கூடாதா? ஆகி அந்த குவிமையம் சிதறுமேயானால் ஏன் அவர்கள் பிரியக் கூடாது? ஏன் அவர்கள் வேறுவேறு ஜோடியைத் தேடிக்கொள்ளக் கூடாது? அது இன்னொரு தேர்வு அதுவும் காதல் தான்.'(2016, 68) என்று கூறுகிறார். இந்தக் கருத்தின் வழி மேற்கண்ட கதைகளை பார்க்கும் போது நமது சமூகத்தில், பண்பாட்டில் புரையோடிப்போய் இருக்கின்ற கற்பு, திருமண உறவு, புனிதக் காதல் ஆகியவற்றிக்கு எதிர் திசையில் இக்கதைகள் பயணம் செய்கிறது என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும். மேலும் இக்கதைகள் தமிழ்ப்பண்பாட்டில் பெண்களின் கற்பு என்கிற பண்பாட்டு பெருமிதத்தின் மீது தாக்குதல்களைக் கொடுக்கிறது என்பதும் கவனிக்கப்பட வேண்டியதாகும். மேலும் கிராம்சி, ரேமண்ட் வில்லியம்ஸ் போன்ற மார்க்ஸிய விமர்சகர்கள் குறிப்பிடுகிற பண்பாடு சார்ந்த சிந்தனைகளுக்கு இடம் கொடுக்கக் கூடியதாகவும் இக்கதைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பது முக்கியமானதாகும்.

ஒருபால் உறவு, திருமண உறவிற்கு அப்பாற்பட்ட பாலுறவு ஆகியவை இந்திய அரசியலமைப்பினால் அங்கீகரிக்கப்படுகிற இந்நேரத்தில் இராசேந்திர சோழனின் கதைகள் மீளாய்விற்கு உட்படுத்தி, தமிழ்ச்சிறுகதை வரலாற்றில் அவரின் கதைகளுக்கான வகிபாகத்தைக் கொடுப்பது அவசியமான ஒரு முயற்சியாகும். மேலும் மார்க்ஸிய மூகாமிலிருந்து மார்க்ஸியத்தை விமர்சித்து உருவாக்கப்பட்ட கதைகளும் மார்க்ஸியத்தை உள்வாங்கி செரித்து எழுதப்பட்ட கதைகளும் இணைந்தது தான் இராசேந்திர சோழனின் கதைகள் என்ற உண்மையும் தமிழ் இலக்கய உலகில் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

## அடிக்குறிப்புகள்


[1] அருணன், விசாரணைகள், வசந்தம் வெளியீட்டகம், மதுரை, 2016.

[2] இராசேந்திர சோழன், இராசேந்திர சோழன் கதைகள், தமிழினி, சென்னை, 2002.

[3] தமிழ்ச்செல்வன், சு., என் சக பயணிகள், பாரதி புத்தகாலயம், சென்னை, 2013.

[4] மதிவாணன், பா,. சேரன், உ.,(பதி. ஆ)., தமிழ் இனி 2000, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2007 (இரண்டாம் பதிப்பு).


### References


[1] Arunan, Inquiries, Vasantham Publishing, Madurai, 2016.

[2] Rajendra Chola, Rasjndra Chola Stories, Tamilini, Chennai, 2002.

[3] C. Thamilchelvan, My fellow travelers, Bharathi Bookstore, Chennai, 2013.

[4] P. Mathivanan, Cheran, ed., (Ed. B). Tamil 2000, Periodical Edition, Nagercoil, 2007 (Second Edition).


**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License